# இயல் 6.1 - எண்கள்

பயிற்சி எண் :: 6.7.1.2.J

அளவைகள் - வினாடி வினா I

## அளவைகள் - வினாடி வினா II

1 பிரபு தினமும் 100 கிராம் பயறு வகை உணவு உண்பான். இதை 0.1 கி.கி எனவும் சொல்லலாம். சரியா தவறா? காரணம் கூறு.

a) சரி
b) தவறு
c) சரி. உயர் அலகில் மாற்றிக் கூறப்பட்டுள்ளது. ✓

2 கவிதா தினமும் 0.15 லிட்டர் பால் அருந்துவாள். இது 1500 மில்லி லிட்டருக்குச்சமம். சரியா தவறா? காரணம் கூறு.

a) சரி
b) தவறு
c) தவறு. குறைந்த அலகில் சரியாக இனமாற்றம் செய்யப்படவில்லை. ✓

3 அழகன் காலையில் சென்று முறையே கத்திரிக்காய் 350 கிராம், வெண்டைக்காய் 550 கிராம் மற்றும் பாகற்காய் 450 கிராம் வாங்கிவந்தான். அவற்றின் மொத்த எடை எவ்வளவு?

a) 1 கி.கி
b) 1000 கிராம்
c) 1.35 கி.கி
d) 1350 கிராம்
e) 1 & 2 சரி
f) 3 & 4 சரி ✓

4 பூங்குழலி கடைக்குச்சென்று தன் 3 தம்பி தங்கைகளுக்கு ஆடை தைப்பதற்கு முறையே 1 மீட்டர் 20 செ.மீ, 2 மீட்டர் 60 செ.மீ மற்றும் 1 மீட்டர் 85 செ.மீ துணிகள் வாங்கி வந்தாள். பூங்குழலி வாங்கிவந்த மொத்தத் துணியின் நீளம் எவ்வளவு?

a) 565 செ.மீ
b) 5 மீ 65 செ.மீ
c) 4 மீ 65 செ.மீ
d) 465 செ.மீ
e) 1 & 2 சரி ✓
f) 3 & 4 சரி

5 1 லிட்டர் 50 மி.லி-ஐ மில்லி லிட்டருக்கு மாற்றுக.

a) 150 மி.லி
b) 1500 மி.லி
c) 105 மி.லி
d) 1050 மி.லி ✓

6 சசிகலா தன்னுடைய பிறந்த நாளன்று 3¾ கிலோ எடையுடைய ஒரு பெரிய கேக்-ஐ வாங்கி அதை 15 சமபங்குகளாக்கி தன் தோழிகளுக்கு விருந்தளித்தாள். விருந்திற்கு அழைத்திருந்த அவளுடைய 15 தோழிகளில் ஒருத்தி வரவில்லை. எனில், பாக்கி இருந்த கேக்கின் எடை என்ன?

a) 0.5 கிலோ கிராம்
b) 250 கிராம் ✓
c) 500 கிராம்
d) அனைத்தும் தவறு

7 2300 மி.கி [?] 2½ கிராம். ஒப்பிடுக.

a) 2300 மி.கி [<] 2½ கிராம் ✓
b) 2300 மி.கி [=] 2½ கிராம்
c) 2300 மி.கி [>] 2½ கிராம்

8 780 மில்லி லிட்டர் [?] ¾ லிட்டர். ஒப்பிடுக.

a) 780 மி.லி [<] ¾ லிட்டர்
b) 780 மி.லி [=] ¾ லிட்டர்
c) 780 மி.லி [>] ¾ லிட்டர் ✓

9 50 செண்டி மீட்டர் [?] ½ மீட்டர். ஒப்பிடுக.

a) 50 செ.மீ [<] ½ மீட்டர்
b) 50 செ.மீ [=] ½ மீட்டர் ✓
c) 50 செ.மீ [>] ½ மீட்டர்

10 250 மில்லி மீட்டர் [?] ¼ மீட்டர். ஒப்பிடுக.

a) 250 மி.மீ [<] ¼ மீட்டர்
b) 250 மி.மீ [=] ¼ மீட்டர் ✓
c) 250 மி.மீ [>] ¼ மீட்டர்

**Information, Rights & Disclaimers** :: Sum & solution prepared on Saturday 27th November, 2021 :: 05:29 Hrs. All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Read :: 4/16/2020 dt. January 31, 2020. https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.